**CC.No. 221/2019 (JM.No.II, DHARMAPURI)**

**28.04.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW– 3 : திரு.வஜ்ரம், த/பெ.பெருமாள்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது தாசன்கொட்டாயில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி முனுசாமி எனக்கு தெரியும், அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

கடந்த 13.04.2015 ம் வருடம் இரவு 08.00 மணிக்கு நான் வீட்டின் முன்பு இருந்த போது எதிரிகள் இருவரும் அ.சா.1க்கு சொத்து எதுவும் எனக்கு கிடையாது என்று அ.சா.1 யை பார்த்து கெட்ட வார்த்தைகளால் திட்டியதாகவும், அதை அ.சா.1 மற்றும் அ.சா2, எதற்கு இவ்வாறு திட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு இரவு நேரம் என்று பாராமல் 1ம் எதிரி கையால் அ.சா.2ஐ கன்னத்தின் மீது அடித்ததாகவும், 2ம் எதிரி கிருஷ்ணன் கல்லால் அ.சா.2னின் முதுகு, இடது காது, இடது கை முட்டி ஆகிய இடங்களில் அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும், 1ம்எதிரி முனுசாமி கல்லால் அ.சா.1னின் தோள் பட்டையின் மீது தாக்கியதாகவும், இதை பார்த்து நானும், அக்கம் பக்கத்தினர் விலக்கிவிட்டதாகவும், காயம் அடைந்த அ.சா.2, அ.சா.1ஐ ஒரு போக்கு வண்டியில் சென்று அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும், இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தாகவும், போலிஸார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிஸார் என்னை விசாரிக்கவில்லை என்று எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>** – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.04.28 17:42:33 +0530

CC.No. 221/2019 (JM.No.II, DHARMAPURI)

28.04.2026

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW– 4 : திரு.ஜெயராமன், த/பெ.பெருமாள்**

**முதல் விசாரணை**

நான் தற்போது தாசன்கொட்டாயில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். எதிரி முனுசாமி எனக்கு தெரியும், அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 13.04.2015 ம் வருடம் இரவு 08.00 மணிக்கு நான் வீட்டின் முன்பு இருந்த போது எதிரிகள் இருவரும் அ.சா.1க்கு சொத்து எதுவும் எனக்கு கிடையாது என்று அ.சா.1 யை பார்த்து கெட்ட வார்த்தைகளால் திட்டியதாகவும், அதை அ.சா.1 மற்றும் அ.சா2, எதற்கு இவ்வாறு திட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு இரவு நேரம் என்று பாராமல் 1ம் எதிரி கையால் அ.சா.2ஐ கன்னத்தின் மீது அடித்ததாகவும், 2ம் எதிரி கிருஷ்ணன் கல்லால் அ.சா.2னின் முதுகு, இடது காது, இடது கை முட்டி ஆகிய இடங்களில் அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும், 1ம்எதிரி முனுசாமி கல்லால் அ.சா.1னின் தோள் பட்டையின் மீது தாக்கியதாகவும், இதை பார்த்து நானும், அக்கம் பக்கத்தினர் விலக்கிவிட்டதாகவும், காயம் அடைந்த அ.சா.2, அ.சா.1ஐ ஒரு போக்கு வண்டியில் சென்று அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும், இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தாகவும், போலிஸார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிஸார் என்னை விசாரிக்கவில்லை என்று எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை** – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.04.28 17:42:48 +0530